Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, MAY 14, 2025

புதன்கிழமை 14, மே 2025 | ஒளி: 10 கதிர்: 238 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE



அமெரிக்காவின் 44 சதவீத வரியால் இலங்கையில்

# 10 இலட்சம் பெண்கள் பாதிப்பர்

**முக்கிய ஏற்றுமதித் தொழில்களான ஆடை, தேயிலை, இரத்தினக் கற்கள், றப்பர் மற்றும் இலவங்கப்பட்டை ஆகியவை அதிகம் பாதிக்கப்படும்**

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்த 44 சதவீத வரிகள் அமுலுக்கு வருமாக இருந்தால், முக்கிய ஏற்றுமதித் துறைகளில் பணிபுரியும் சுமார் ஒரு மில்லியன் இலங்கைப் பெண்கள் வேலைவாய்ப்பையும் வருமானத்தையும் இழப்பார்கள் என்று ஆசியா நியூஸ் (ANN) தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



# அலதெனிய விபத்தில் 30 பேர் காயம்

மொஹொமட் ஆஷிக்

கண்டி-அலதெனிய பொலிஸ் பிரிவில், திங்கட்கிழமை (12) இரவு 10 மணியளவில், பஸ்ஸொன்று, பிரதான வீதியில் இருந்து சிறிய வீதி ஒன்றுக்குள் கவிழ்ந்து விபத்துக்கு உள்ளாகவிருந்தது. எனினும், தெய்வாதீனமாக அந்த பஸ் கவிழாமல், வீதியோர கொங்கிரீட் சுவரில் சிக்கி, கீழ் வீதியில் குத்தி நின்று கொண்டது.

இந்த சம்பவத்தில், பஸ்ஸில் இருந்தவர்களில் 30 பேர், காயங்களுக்கு உள்ளான நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

# ‘டீச்சர் அம்மா’வுக்கு 3 குழுக்கள் வலை

இளைஞனின் அடிவயிற்றில் பல தடவைகள் எட்டி உதைத்துத் தாக்குதல் நடத்தினார் என கூறப்படும் புலமைப்பரிசில் வகுப்புகளை நடத்தும் ‘டீச்சர் அம்மா’ என்ற புனைப் பெயரால் அழைக்கப்படும் ஹயேஷிகா பெர்னாண்டோவை, கைது செய்ய மூன்று பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

சந்தேக நபரான அந்த பெண்ணின் தொலைபேசி செயலிழந்து உள்ளது. அவர், தன்னுடைய மகளுடன் அப்பிரதேசத்தை விட்டுத் தலைமறைவாகி உள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதல்களுக்கு உள்ளான இளைஞனின் சகோதரி, தன்னுடைய முகப்புத்தகத்தில் (பேஸ்புக்) பதிவிட்ட ஒரு பதிவுக்குப் பழிவாங்கும் நோக்கில், அந்த இளைஞன் மீது, ‘டீச்சர் அம்மா’ அவருடைய கணவன், அவர்களின் நிறுவனத்தின் முகாமையாளர் ஆகியோர் இணைந்து தாக்குதல் நடத்தியுள்ளனர் என்பது விசாரணைகள்



தொடர்ச்சி P2



# உப்பு தட்டுப்பாட்டால் பதப்படுத்துவதில் சிக்கல்

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

உப்பு விலை உயர்வினால் உணவு பொருட்களை பதப்படுத்த முடியவில்லை என உப- உணவு பதனீட்டாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த நவம்பர் மாதத்திற்குப் பின்னர் இருந்து இந்த நிலைமை நீடிப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

கொரோனா வைரஸ் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலவிய காலத்தில் 60 ரூபாய்க்கு விற்ற ஒரு கிலோ கிராம் கல் உப்பு சமீப சில நாட்களுக்கு முன்னர் சடுதியாக விலை அதிகரித்து, தற்போது ஒரு கிலோ கிராம் 350 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

தொடர்ச்சி P2





# மட்டக்களப்பில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

மட்டக்களப்பில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் அமைப்பின் ஏற்பாட்டில், முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை வாரத்தில், முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு காந்திபூங்காவில் செவ்வாய்க்கிழமை (13)அன்று இடம்பெற்றது.

– க.விஜயரெத்தினம்

இரண்டு அணிகளுக்கு

# ‘ஈ.பி.டீ.பி. ஆதரவு வழங்காது’

தமிழ் மக்களின் அடையாளங்களை அழிக்க முயலும் தேசிய மக்கள் சக்திக்கோ, சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தமில்லாத தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கோ ஆதரவில்லை என்று தெரிவித்துள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந் பன்னீர்செல்வம், காத்திரமான எதிர்த்தரப்பாக உள்ளூராட்சி சபைகளை எதிர் கொள்ளவே கட்சி தீர்மானித்து இருப்பதாகவும் தெரிவித்தார்.

யாழ். ஊடக மையத்தில் செவ்வாய்க்கிழமை (13) அன்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்த தேர்தல் முடிவுகள் எம்மை பொறுத்தவரையில் ஏமாற்றங்களையோ ஆச்சரியங்களையோ ஏற்படுத்தவில்லை. காரணம்,



தொடர்ச்சி P2

339 உள்ளூராட்சி மன்றங்களின்

# பதவிக் காலம் ஜூன் 02 ஆரம்பம்

வி.ரி.சகாதேவராஜா

மே.6ஆம் திகதியன்று நடைபெற்ற 339 உள்ளூராட்சி மன்றங்களின் நான்கு ஆண்டுகால பதவிக்காலம் 2025.06.02ஆம் திகதி முதல் ஆரம்பமாகும். இது தொடர்பில், பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

அதற்கமைய உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளின் முதல் கூட்டம் ஜூன் 2ஆம் திகதி கூட வேண்டும்.

மே. 6ஆம் திகதியன்று நடைபெற்ற 339 உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளுக்கான வாக்கெடுப்பில்,

ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தி 265 சபைகளையும், இலங்கை தமிழ் அரசுக் கட்சி 35 சபைகளையும், ஐக்கிய மக்கள் சக்தி 14 சபைகளையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 6 சபைகளையும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் முறையே 3 சபைகளையும்,

தொடர்ச்சி P2

கொத்மலை விபத்து:

# விசேட பொலிஸ் குழு விசாரணை

கொத்மலை பொலிஸ் பிரிவின் கரடி எல்ல பகுதியில், ஞாயிற்றுக்கிழமை (11) அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற பேருந்து விபத்து குறித்து விசேட பொலிஸ் விசாரணை குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கதிர்காமத்திலிருந்து குருநாகல் நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்து சபை பேருந்து, விபத்துக்குள்ளானதில் 22 பேர் உயிரிழந்துள்ளனர், மேலும் மற்றொரு குழு காயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறது.

இந்த பேருந்து விபத்துக்கான காரணங்களை விசாரிக்க, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தலைமையிலான நான்கு மூத்த பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட ஒரு சிறப்புக் குழுவை,

தொடர்ச்சி P2



# ‘குஷ்’ஷுடன் யுவதி கைது

சுமார் 46 கோடி ரூபாய் மதிப்புள்ள ‘குஷ்’ எனும் போதைப்பொருளை தனது பயணப் பொதியில் மறைத்து வைத்து கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து ‘கிரீன் சேனல்’ (Green Channel) வழியாக வெளியேறிய பிரித்தானியாவை சேர்ந்த 21 வயதான யுவதி ஒருவர் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் திங்கட்கிழமை (12) அன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

திங்கட்கிழமை (12) மாலை 3.45 மணியளவில் தாய்லாந்து பெங்கொக்கில் இருந்து ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான யு.எல்.-405 என்ற விமானத்தில், வர்த்தக வகுப்பில் பயணித்து, கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

அவர் கொண்டு வந்த இரண்டு பயணப் பொதிகளில் எவ்விதமான வேறு பொருட்களும் இன்றி, 46 கிலோ கிராம் "குஷ்" எனும் போதைப்பொருள் மட்டுமே இருந்துள்ளது.

கட்டுநாயக்க விமான நிலைய சுங்க வரலாற்றில் கைப்பற்றப்பட்ட அதிகளவான ‘குஷ்’ போதைப்பொருள் என்று கட்டுநாயக்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பிரிட்டிஷ் பிரஜை மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.



PAGE 1 தொடர்ச்சிகள்

# 10 இலட்சம் பெண்கள் பாதிப்பர்

அமெரிக்க சந்தை மிகவும் இலாபகரமான சந்தைகளில் ஒன்றாக இருப்பதால், பெரும்பாலும் பெண்களைப் பணியமர்த்தும் இலங்கையின் முக்கிய ஏற்றுமதித் தொழில்களான ஆடை, தேயிலை, இரத்தினக் கற்கள், றப்பர் மற்றும் இலவங்கப்பட்டை ஆகியவை புதிய வரிகளால் அதிகம் பாதிக்கப்படும்.

நாட்டின் மொத்த ஏற்றுமதியில் சுமார் 40 சதவீதத்தை ஆடைத் தொழில் கொண்டுள்ளது. இத் தொழில் முக்கியமாக கிராமப்புறங்களில் குறைந்த வருமானம் கொண்ட பின்னணியைச் சேர்ந்த பெண்களைப் பணியமர்த்துகிறது. இந்த வேலைகள் வறுமையிலிருந்து வெளியேறுவதற்கான ஒரு முக்கியமான பாதையை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

“பெண் தொழிலாளர்களுக்கு இடையூறாக இருக்கும் அமெரிக்க வரிகளுக்கு எதிரான எங்கள் பிரசாரத்தை மேற்கொள்ள மகளிர் மையம் 25 பிற மகளிர் அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றியுள்ளது,” என்று அதன் நிர்வாக இயக்குனர் பத்மினி வீரசூரியா கூறினார்.

கட்டணங்கள் நடைமுறைக்கு வந்தால், “அவர்களின் வீட்டிற்கு எடுத்துச் செல்லும் ஊதியம் கணிசமாகக் குறையும்,” என்று அவர் மேலும் கூறினார்.

அத்துடன், “ முன் பதிவுகள் குறைந்து, சுமார் ஆறு மில்லியன் சார்ந்திருப்பவர்களும் கடுமையாக பாதிக்கப்படுவார்கள்.

தேவை குறைய வாய்ப்புள்ளதால், தொழிலாளர்களை பணி நீக்கம் செய்வது குறித்து தொழிற்சாலைகள் ஏற்கெனவே விவாதித்து வருகின்றது.

இந்தியா,பங்களாதேஷுடன் ஒப்பிடும்போது, இலங்கை மீது விதிக்கப்பட்ட வரிகள் அதிகமாக உள்ளன. அதனால் இலங்கை பெண்கள் அதிக போட்டியை எதிர்கொள்கின்றனர்.

தொழிற்சாலைகள் மூடப்பட்டால், பணிபுரியும் சுமார் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட பெண்கள் பாதிக்கப்படுவார்கள்.

புதிய வரி விதிப்பு அமெரிக்காவிற்கான ஏற்றுமதியை 20 சதவீதம் குறைக்கும், வெளிநாட்டு நாணய வருவாயில் ஆண்டுக்கு சுமார் 300 மில்லியன் அமெரிக்க டொலர் இழப்பு ஏற்படும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

கடந்த 2024ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த பொருட்களின் ஏற்றுமதி 13 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியதால், இது “நாட்டின் வர்த்தக சமநிலைக்கு ஒரு பெரிய அடி” மற்றும் “பொருளாதார வளர்ச்சி வாய்ப்புகளுக்கு” ஒரு பெரிய அடியாகும் எனவும் நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.



# அலதெனிய விபத்தில் 30 பேர் காயம்

குருநாகல்-கல்கமுவையில் இருந்து வெசாக் தோரணங்களைப் பார்வையிடுவதற்காக வருகைதந்தவர்கள், வாடகைக்கு அமர்த்தப்பட்ட பஸ்ஸே, இந்த அனர்த்தத்திற்கு முகங்கொடுத்தது.

கல்கமுவையில் காலையில் புறப்பட்டு, தங்களுடைய சொந்த ஊர்களுக்கு புறப்பட்டு இரவு சென்றுகொண்டிருந்த போதே, இந்த அனர்த்தத்துக்கு முகங்கொடுத்துள்ளனர்.

சம்பவத்தை அடுத்து விரைந்து செயற்பட்ட பிரதேசவாசிகள், பஸ்ஸூக்குள் சிக்கியிருந்தவர்கள் மீட்டெடுத்து வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை அலதெனிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# உப்பு தட்டுப்பாட்டால் பதப்படுத்துவதில் சிக்கல்

உப்பு விலையின் இந்த அசுர அதிகரிப்பினால் உப்பைக் கொண்டு பதனிடப்படும் உப-உணவுகளைப் பதனிட முடியவில்லை என்று உணவு பதனிடுவோர் அங்கலாய்க்கின்றனர்.

இதேவேளை, அதிக விலை கொடுத்து உப்பை வாங்கி உப்பைப் பிரதானமாகக் கொண்டு பதனிடப்படும் மோர் மிளகாய், ஊறுகாய், உப்புக் கருவாடு ஆகியவற்றைப் பதனிட முடியாததால் ஒரு புறத்தில் உப்புக் கருவாடு, மோர் மிளகாய்,ஊறுகாய் என்பனவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மறுபுறத்தில், மிளகாய் கருவாடு தயாரிக்கப் பயன்படும் நெத்தலி, அய்யா மாசி, கூனி இறால், கட்டாப்பாரை போன்ற மீன்கள், தேசிப்பழம் என்பனவற்றை விற்பனை செய்ய முடியவில்லை என்று விவசாயிகளும் மீனவர்களும் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக மிளகாய் உற்பத்தி செய்யப்படும் சில பிரதேசங்களில் ஒரு கிலோ கிராம் மிளகாய் 100 ரூபாவுக்கும் விற்பனை செய்ய முடியாத நிலையுள்ளதாக அங்குள்ள விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேபோன்று கருவாட்டுக்காக சிறு மீன்களைப் பிடிப்போரும் உப்புக் கருவாடு தயாரிக்க முடியவில்லை என்பதால் சில நேரங்களில் பிடிக்கப்படும் மீன்களை விற்க முடியாததால் அவற்றைக் குப்பையில் கொட்ட வேண்டிய நிலை உள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

ஒட்டு மொத்தத்தில் உப்பு விலை உயர்வினால் விவசாயிகளும், மீனவர்களும், இல்லத்தரசிகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடத்தில் பெரு வெள்ளத்தினால் ஏற்பட்ட உப்புப் பற்றாக்குறையை நீக்க இந்தியாவிலிருந்து 30 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பு இறக்குமதி செய்யப்படுவதாகவும் அது பிப்ரவரி மாத இறுதியில் இலங்கைக்கு வந்து சேர்ந்து விடும் என்று அரசு அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது

சுமார் 30 மெட்ரிக் தொன் உப்பை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்திருந்த போதும், அது தாமதமாகியுள்ளதாக உப்பு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் கனக அமரசிங்க தெரிவித்தார்.

எதிர்வரும் வாரத்தில் குறித்த உப்புத் தொகை கிடைத்த பின்னர், உப்பு தட்டுப்பாடு கட்டுப்படுத்தப்படும் என்றார்..

நாட்டின் சில பகுதிகளில் ஒரு கிலோ கிராம் கட்டி உப்பு பெக்கெட்டின் விலை 450 ரூபாய் முதல் 500 ரூபாய் வரையில் விற்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# விசேட பொலிஸ் குழு விசாரணை

பதில் பொலிஸ் மா அதிபர் நியமித்துள்ளார்.

விபத்துக்கு வழிவகுத்த சூழ்நிலைகளின் பல அடிப்படை அம்சங்களை உள்ளடக்கிய விசாரணைகளை நடத்தவும், எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துகளைத் தடுக்க இலங்கை பொலிஸ் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்த முன்மொழிவுகளை சமர்ப்பிக்கவும் பதில் பொலிஸ்மா அதிபர், அந்த விசேட குழுவிற்கு அறிவுறுத்தியுள்ளார்



# ‘ஈ.பி.டி.பி. ஆதரவு வழங்காது’

வித்தியாசமான அரசியல் சூழலிலேயே நாங்கள் இந்த தேர்தலை எதிர்கொண்டிருந்தோம். எந்த விதமான அரசியல் அதிகாரங்களும் அற்ற நிலையில், எம் மீதான ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களும், எமது செயலாளர் நாயகம் கைது செய்யப்படப் போகின்றார் என்ற ஆதாரமற்ற வதந்திகளும் ஒரு புறம் பரப்பப்பட்டுக் கொண்டிருக்க, மறுபுறத்தில் வழமைபோன்று எமக்கு எதிரான சேறடிப்புக்களும் முன்னெடுக்கப்பட்ட நிலையிலேயே இந்த தேர்தலை எதிர்கொண்டிருந்தோம். இந்நிலையில் எமக்கு 20,000 இற்கும் மேற்பட்ட வாக்குகள் கிடைத்திருக்கின்றன.

இது எமது மக்கள் எமது வேலைத் திட்டங்களையும் எமது நடைமுறைச் சாத்தியமான அரசியல் அணுகுமுறைகளையும் ஆதரிக்கின்றார்கள் என்ற செய்தியையே வெளிப்படுத்தி இருக்கின்றது. அந்தவகையில், இந்த தேர்தல் முடிவினை பின்னடைவிலும் ஒரு வெற்றியாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

இந்நிலையிலே உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைப்பது தொடர்பில் எமது நிலைப்பாடு பற்றிய கேள்வி பல்வேறு தளங்களில் தற்போது பேசு பொருளாகக் காணப்படுகின்றது.

எம்மை பொறுத்த வரையில், தேசிய மக்கள் சக்தியும், அதேபோன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தவிர்ந்த தரப்புக்கள் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைக்க எமது ஒத்துழைப்பு அவசியம் எனக் கருதி எம்மை அணுகும் பட்சத்தில் அவை தொடர்பாக சாதகமாக பரீசிலிக்க தயாராக இருக்கின்றோம். அவ்வாறான தேவை ஏற்படாத பட்சத்தில், ஆரோக்கியமான எதிர்த்தரப்பாக உள்ளூராட்சி மன்றங்களில் தனித்துவமாக மக்கள் நலன்சார்ந்து செயற்படுவதற்கு ஆர்வமாக இருக்கின்றோம்.

தேசிய மக்கள் சக்தி என்று சொல்லிக் கொள்ளுகின்ற ஜே.வி.பி. கட்சியினருக்கு ஆதரவு தெரிவிக்க மறுப்பதற்கு இனவாதமோ, இன ரீதியான சிந்தைகைளோ காரணம் இல்லை என்பதை முதலில் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

எம்மை பொறுத்தவரையில், எமது மக்களுடைய அபிலாசைகளை வென்றெடுப்பதற்கும், எமது மக்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகளைத் தீர்வுகாண்பதற்கும் தேசிய நல்லிணக்கம் அத்தியாவசியமானது என்பதை உறுதியாக நம்புகின்றோம்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரைப் பொறுத்த வரையில் இப்போதுகூட கொள்கை ரீதியான உடன்பாடு கொள்கை ரீதியான கூட்டிணைவு என்று திரும்பச் திரும்ப சொல்லி வருகின்றார்கள். அவர்களுடைய கொள்கை என்ன என்பது அவர்களுக்கே விளங்க வில்லை என்பதையே அவர்களின் செயற்பாடுகள் வெளிப்படுத்துகின்றன என்றார்.



# ‘டீச்சர் அம்மா’வுக்கு...

அதனடிப்படையில், ‘டீச்சர் அம்மா’ என அழைக்கப்படும் ஹயேஷிகா பெர்னாண்டோ என்பவரின் கணவர் மற்றும் முகாமையாளர் கட்டான பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், புதன்கிழமை (14) வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தின் கட்டளையின் அடிப்படையில் இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதல்களுக்கு இலக்கான இளைஞன், நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஹயேஷிகா பெர்னாண்டோ, தன்னுடைய நிறுவனத்தில் கடமையாற்றும் யுவதிக்கு, கணினியைப் பயன்படுத்தும் முறைமை தொடர்பாக கற்பிக்குமாறு, அந்த இளைஞனிடம் கேட்டுள்ளார். அப்போது அவ்விளைஞனால், அந்த யுவதி, துன்புறுத்தப்பட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பில், ஹயேஷிகா பெர்னா ண்டோவின் கணவன், முகாமையாளர் மற்றும் யுவதி ஆகியோர் கட்டான பொலிஸ் நிலையத்திற்கு வந்துள்ளனர்.

அங்கு இரு தரப்பினரின் முறைப்பாடுகளும் பெற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. இதனையடுத்தே, ஹயேஷிகா பெர்னாண்டோ, அவருடைய கணவன், முகாமையாளரினால் அவ்விளைஞன் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என பொலிஸ் விசாரணைகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், ஹயேஷிகா பெர்னாண்டோவின் கணவன், முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஹயேஷிகா பெர்னாண்டோவை கைது செய்வதற்கு அவருடைய வீட்டுக்குச் சென்றபோது, தன்னுடைய மகளுடன் அவர், பிரதேசத்தை விட்டுத் தலைமறைவாகியுள்ளார்.

மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் சஞ்சீவ தர்மரத்னவின் அறிவுறுத்தலின் பேரில், நீர்கொழும்பு பிரிவுக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் அசோக தர்மசேனவின் மேற்பார்வையின் கீழ், கட்டான பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, தலைமை பொலிஸ் பரிசோதகர் வசந்த சுதசிங்க மற்றும் பிற அதிகாரிகள் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# பதவிக் காலம் ஜூன் 02 ஆரம்பம்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 2 சபைகளையும், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி மற்றும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி 1 சபையையும் பெற்றுக்கொண்டன. 4 சுயேட்சைக் குழுக்கள் தலா 1 சபைகளை கைப்பற்றிக்கொண்டன.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் முடிவுகள் கடந்த புதன்கிழமை (7) உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டன.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட 49 அரசியல் கட்சிகள் மற்றும் 257 சுயேச்சைக் குழுக்கள் சார்பில் 75,589 பேர் போட்டியிட்டனர்.

2023ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் முடிவடைந்து 21 நாட்களுக்குள் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் தேர்தல் பிரச்சாரம் தொடர்பான செலவு விபரத்திரட்டை உறுதிப்படுத்தப்பட்ட வகையில் சமர்ப்பிக்க வேண்டும் என்று அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.









## தீபம் ஏற்றி அஞ்சலி

கொத்மலை, ரம்பொட கரடி எல்ல பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (11) இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த 22 பேருக்காக விபத்து இடம்பெற்ற இடத்தில் திங்கட்கிழமை (12) அன்று பூக்களைத் தூவி, தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

– ரஞ்சித் ராஜபக்ஷ









### வீதி விபத்துகளைத் தடுப்பதற்கு

# விசேட செயல்திட்டம்

நாடு முழுவதும் அதிகரித்து வரும் வீதி விபத்துகளைத் தொடர்ந்து, 16 நிறுவனங்கள் கூட்டாக இணைந்து தயாரிக்கப்பட்ட வீதி விபத்துகளைத் தடுப்பதற்கான விசேட செயல் திட்டம் அடுத்த இரண்டு மாதங்களுக்குள் செயல்படுத்தப்படும் என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான (SLTB) பேருந்து ஒன்று, ஞாயிற்றுக்கிழமை (11) அன்று நுவரெலியா-கம்பளை பிரதான வீதியிலிருந்து விலகி பள்ளத்தாக்கில் விழுந்து சுமார் 22 பயணிகள் உயிரிழந்துள்ளனர் மற்றும் 35க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இந்த நிலையில், வீதி விபத்துகளைத் தடுப்பதற்கான திட்டங்கள் குறித்து, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் டாக்டர் பிரசன்ன குணசேன கூறியுள்ளதாவது,

மூன்று மாதங்களுக்கு முன்பு தொடங்கப்பட்ட 'வீதி பாதுகாப்பு' என்ற




முயற்சியின் ஒரு பகுதியாக ஒரு செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இது வீதி விபத்துக்களால் ஏற்படும் இறப்புகள் மற்றும் காயங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு தொடங்கப்பட்டது.

வீதி போக்குவரத்து மற்றும் பாதுகாப்பில் உள்ள அனைத்து முக்கிய பங்குதாரர்களும் இந்த திட்டத்தின் கீழ் ஒன்றிணைக்கப்படுகிறார்கள்.

இதில் வீதி பயணிகள் போக்குவரத்து ஆணைக்குழு, இலங்கை போக்குவரத்து சபை, ரயில்வே துறை, பொலிஸ், மோட்டார் போக்குவரத்துத் துறை, தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் மற்றும் பல அடங்கும்.

அவர்கள் ஒரு செயல் திட்டத்தைத் தயாரித்துள்ளனர், மேலும் அது அடுத்த இரண்டு மாதங்களுக்குள் செயல்படுத்தப்படும் என்று டாக்டர் குணசேன சுட்டிக்காட்டினார்.

உலக வங்கியின் கூற்றுப்படி, இலங்கை ஒவ்வோர் ஆண்டும் சராசரியாக 38,000 வீதி விபத்துகள் இடம்பெறுகின்றன.

இதன் விளைவாக சுமார் 3,000 இறப்புகள் மற்றும் 8,000 பேர் படுகாயமடைகிறார்கள். நாட்டின் மதிப்பிடப்பட்ட வருடாந்திர தனிநபர் வீதி விபத்து, இறப்பு தெற்காசிய அண்டை நாடுகளில் மிக உயர்ந்தது மற்றும் உலகின் சிறப்பாக செயல்படும் நாடுகளை விட ஐந்து மடங்கு அதிகம்.

தேசிய வீதி விபத்து இறப்புகளை 50% குறைக்கும் நிலையான வளர்ச்சி இலக்கு 3.6 சதவீதமாக அடைய, அடுத்த தசாப்தத்தில் இலங்கை கிட்டத்தட்ட 2 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்ய வேண்டியிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பழ பானம் கொடுத்து பெண்ணை பள்ளத்தில் தள்ளிய வேன் ஓட்டுநர்

அல்ஜீரிய பெண் ஒருவருக்குப் போதை மருந்து கொடுத்து, அவரது சுமார் 800,000 ரூபாய் மதிப்புள்ள பொருட்களைத் திருடி, பெண்ணை ராவண எல்ல அருகே ஒரு பள்ளத்தாக்கில் இருந்து தள்ளிவிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நுவரெலியாவில் வேன் ஓட்டுநராகப் பணியாற்றிய ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சாரா அர்ரார் என்ற 26 வயதுடைய பெண், மே 7ஆம் திகதி இலங்கைக்கு வந்து, கண்டிக்குச் சென்று, பின்னர் நுவரெலியாவுக்கு சென்றுள்ளதுடன் நுவரெலியாவில் இருந்து எல்ல பிரதேசத்திற்குப் பயணிக்க ஒரு வேனை இணையவழி ஊடாக முன்பதிவு செய்துள்ளார்.

இந்த பயணத்தின் போது, ஓட்டுநர் குறித்த பெண்ணுக்கு பழ பானம் கொடுத்துள்ளதுடன், அதன் பிறகு அவர் சுயநினைவை இழந்ததாகக் கூறப்படுகிறது.

பின்னர் சந்தேக நபர் ராவண எல்ல அருகே ஒரு ஒதுக்குப்புறமான பகுதிக்கு ஓட்டிச் சென்று, மயக்கமடைந்த பெண்ணை வாகனத்திலிருந்து வெளியே எடுத்து, 30 அடி



பள்ளத்தில் தள்ளிவிட்டு, அவரது பணம் மற்றும் உடைமைகளுடன் சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

காயங்கள் இருந்தபோதிலும், சுற்றுலாப் பயணி சுயநினைவு அடைந்து, பல கிலோ மீட்டர் தூரம் தாண்டி எல்ல பொலிஸ் நிலையத்திற்கு நடந்து சென்று, முறைப்பாடு பதிவு செய்துள்ளதுடன் அதன் பின்னர் அவர் சிகிச்சைக்காக பதுளை போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட, எல்ல பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்து, வேனையும், பாதிக்கப்பட்டவரிடம் இருந்து திருடப்பட்டதாகக் கூறப்படும் சுமார் 500,000

> **சுற்றுலாப் பயணி சுயநினைவு அடைந்து, பல கிலோ மீட்டர் தூரம் தாண்டி எல்ல பொலிஸ் நிலையத்திற்கு நடந்து சென்று, முறைப்பாடு பதிவு செய்துள்ளதுடன் அதன் பின்னர் அவர் சிகிச்சைக்காக பதுளை போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்**

ரூபாய் மதிப்புள்ள இரண்டு தொலைபேசிகளை மீட்டுள்ளனர்.

சந்தேக நபர் மகஸ்தோட்டையைச் சேர்ந்த 70 வயதான ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி எனவும் தற்போது வாடகை வேன் ஓட்டுநராக பணியாற்றி வருவதாகவும் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கல்கிசை துப்பாக்கிச் சூடு: இருவர் கைது

கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சில்வெஸ்டர் வீதிக்கு அருகில் கடந்த 05ஆம் திகதி துப்பாக்கிச் சூடு நடத்தி ஒருவர் கொன்றனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் இருவர், சந்தேகத்தின் பேரில், கல்கிசை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் திங்கட்கிழமை(12) பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் கல்கிசை, தெஹிவளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 21 மற்றும் 32 வயதுடையவர் ஆவார். இவர்கள் இருவரும் வெளிநாட்டில் தலைமறைவாக இருக்கும் பாரிய அளவிலான போதைப்பொருள் கடத்தல்காரரான படோவிட்ட அசங்கவின் போதைப்பொருள் கடத்தல் தொழிலை நடத்தி வரும் சாண்டோவின் இரண்டு உதவியாளர்கள் என பொலிஸார் தெரிவிக்கின்றனர். அவர்களிடமிருந்து முச்சக்கரவண்டியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று வீடொன்றுக்கு முன்பாகத் துப்புரவு செய்து கொண்டிருந்த, தெஹிவளை, ஓபன் பிளேஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய கல்கிசை நகர சபையின் கீழ் திடக்கழிவு துறையில் பணியாற்றி பிரவீன் நிசங்க என்ற இளைஞன் மீது, மோட்டார் சைக்கிளில் வந்த



இருவரில் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்த முயன்றார்.

அதிலிருந்து தப்பிய இளைஞன், சிறிது தூரம் ஓடிச் சென்றார். மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்கி, அவரை பின் தொடர்ந்து ஓடிய துப்பாக்கி தாரி, வீதியின் ஓரத்தில் வைத்து அந்த இளைஞன் மீது பல தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார். அப்போது, திரும்பி வந்த அதே மோட்டார் சைக்கிளில் ஏறி, துப்பாக்கிதாரி தப்பியோடிவிட்டார். சம்பவ இடத்திலேயே அவ்விளைஞன் உயிரிழந்தார்.

இதையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு உதவி செய்ததாகக் கூறப்படும் இரண்டு சந்தேக நபர்கள் கல்கிசை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிசை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## கார் பள்ளத்தில் விழுந்து விபத்து



■ பி.கேதீஸ்

தலவாக்கலை-பூண்டுலோயா பிரதான வீதி, ஹொலிரூட் பகுதியில் செவ்வாய்க்கிழமை (13) அன்று காரொன்று வீதியை விட்டு விலகி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

பூண்டுலோயா பகுதியிலிருந்து தலவாக்கலை நோக்கிப் பயணித்த கார் ஒன்றே விபத்துக்குள்ளாகியுள்ளது. காரில் பயணித்தவர்களுக்குப் பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கார் பலத்த சேதமடைந்துள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தீயில் கருகி யுவதி மரணம்

கொட்டாவை, ருக்மல்கம வீதி, விஹார மாவத்தையில் உள்ள தனது வீட்டிற்குள் எரிந்து, இறந்த நிலையில் கண்டெடுக்கப்பட்ட யுவதியின் மர்மமான மரணம் தொடர்பில் கொட்டாவை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பிரதம்மனி துரஞ்சா என்ற 19 வயதுடைய யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தின் போது, அவர் வீட்டில் தனியாக இருந்துள்ளார் என கூறப்படுகின்றது.

அவரது உடல் முற்றிலும் கருகி இருந்துள்ளதுடன், வீடு மற்றும் கூரையும் பாரிய சேதமடைந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பாதிக்கப்பட்டவரின் தாயார் மற்றும் இரண்டு சகோதரர்கள் வெசாக் தோரணங்களைப் பார்ப்பதற்காக வீட்டிலிருந்து சென்றிருந்ததன் போதே



இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது. ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டை தீயணைப்பு படையின் தீயணைப்பு வீரர்கள், அப்பகுதி மக்களுடன் சேர்ந்து தீயை அணைத்தனர். இருப்பினும், அவர்கள் வருவதற்குள் அந்த யுவதி உயிரிழந்துள்ளார்.

தீ விபத்துக்கான காரணம் இன்னும் தெரியவில்லை. நுகேகொடை குற்றப்பிரிவு அதிகாரிகள் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நாட்டை சுற்றி கடல் இருந்தாலும் உப்புக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது

அத்தியாவசிய பொருட்களுக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாடு நீங்கவில்லை. மரக்கறிகளின் விலைகள் எகிறியுள்ளன. இந்நிலையில், நாட்டில் உப்புக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

நாட்டின் உப்பு நிலங்களில் உப்பு அறுவடை மார்ச் மாதம் தொடங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. என்றாலும், உப்புத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. உப்பின் விலை எகிறிவிட்டது. இதனால், உணவுப்பொருட்களைப் பதப்படுத்தி வைப்பதில் பலரும் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இலங்கை வரலாற்றில் முதன்முறையாக, உப்புத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இலங்கையைச் சுற்றி கடல் உள்ளது. இந்த நாட்டுக்கு நிறைய சூரிய ஒளியும் கிடைக்கிறது. இருப்பினும், இந்த நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உப்பு நாட்டிற்கு போதுமானதாக இல்லாத சூழ்நிலை உருவாகியுள்ளது.

இலங்கை கடலால் சூழப்பட்டிருந்தாலும், மீன்களையும் இறக்குமதி செய்கிறோம்.

இலங்கையில் விளையும் அரிசியை இந்த நாட்டு மக்கள் 2,000 ஆண்டுகளுக்கும் மேலாக சாப்பிட்டு வருகின்றனர். ஆனால் இன்று அரிசியையும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது.

இந்த நாட்டில் உப்பு பற்றாக்குறைக்குக் காரணம், திடீர் மக்கள் தொகைப் பெருக்கமோ, உப்பு நுகர்வு அதிகரிப்போ அல்ல. உப்பு பற்றாக்குறைக்குப் பின்னால் ஏதோ ஒரு வகையான உற்பத்தி நெருக்கடி இருக்க வேண்டும் என்றே யூகிக்க வேண்டும்.

உப்பின் அறிவியல் பெயரான சோடியத்தின் அடிப்படையில் பல வகையான தொழில்துறை உப்புகள் உள்ளன. இவற்றைக் குழம்பில் போட முடியாது. உப்பு பற்றாக்குறையை அடுத்து இந்த நாட்டில் நுகர்வோர் அதிக அளவில் உப்பை சேமித்து வைக்கத் தொடங்கினர்.

மனித நாகரிகத்தின் தோற்றத்திற்கு அடிப்படையாக இருந்த பல்வேறு பொருட்கள் உள்ளன. இவற்றில் உப்பு முதலிடம் வகிக்கிறது. உப்பு இல்லாமல் ஒரு நாகரிக மனிதன் பலவீனமான உயிரினமாகவே இருப்பான். கடல்கள் உள்ள நாடுகளில் உள்ள மக்கள் கடல் நீரை ஆவியாக்கி உப்பை உருவாக்குகிறார்கள்.

நிலத்தால் சூழப்பட்ட நாடுகளில் உள்ள மக்கள் உப்புச் சுரங்கங்களில் இருந்து உப்பைப் பெறுகிறார்கள். இயற்கையின் திட்டம் மிகவும் விலைமதிப்பற்றது. உப்பு பற்றாக்குறை உள்ள நாடுகளுக்கு உப்புச் சுரங்கங்களை வழங்குவதில் இயற்கை நியாயமாக இருந்தது. மக்கள் 6,000 ஆண்டுகளாக உப்பைப் பயன்படுத்தி வருகின்றனர். விலங்குகளுக்கும் உப்பு தேவை. உள்ளது.

உணவைப் பாதுகாக்கப் பயன்படுத்தக்கூடிய சிறந்த பாதுகாப்பாக உப்பு உள்ளது. நாகரிகத்தால் வர்த்தகம் செய்யப்படும் மிக முக்கியமான பொருட்களில் ஒன்றாக உப்பு கருதப்படுகிறது. ஒரு இறந்த உடல் உப்பு மண்ணில் புதைக்கப்படும்போது, அது உப்பு சதுப்புநிலமாக மாறி ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அப்படியே இருக்கும். உப்பின் கதை கடலைப் போல பெரியது. எனவே, இந்த நாட்டில் உப்பு பற்றாக்குறைக்கான காரணத்தைக் கண்டறிந்து பற்றாக்குறைக்குத் தீர்வு காணவேண்டும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







எம்.எஸ்.எம்.ஐயூப்

# தேர்தலில் வென்றவர்களும் கதிரையில் அமர முடியாத நிலை

கடந்த 6ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் தொடர்பாக போட்டியிட்ட அரசியல் கட்சிகள் தெரிவித்துள்ள கருத்துக்களைப் பார்க்கும் போது, சகல கட்சிகளும் வெற்றியடைந்துள்ளதாகவே தெரிகிறது.

தேர்தல் நடைபெற்ற 339 உள்ளூராட்சி மன்றங்களில் 266 மன்றங்களில் முதலிடத்தையும் 133 மன்றங்களில் அருதிப் பெரும்பான்மையையும் வென்ற தேசிய மக்கள் சக்தி அச்சாதனைகளைக் காட்டி தாமே வெற்றியாளன் என்கிறது.

ஜனாதிபதித் தேர்தலில் தாம் பெற்றதைப் பார்க்கிலும், பத்து இலட்சம் வாக்குகளையும் பொதுத் தேர்தலில் பெற்றதைப் பார்க்கிலும், 23 இலட்சம் வாக்குகளையும் இம்முறை தாம் இழந்துள்ளதை அக்கட்சி பொருட்படுத்தவில்லை போலும்.

பொதுத் தேர்தலில் தாம் பெற்றதைப் பார்க்கிலும், இம்முறை மூன்று இலட்சம் வாக்குகள் அதிகரித்துள்ளதாகவும் அது ஐந்து வீத அதிகரிப்பாகும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்கள் மார்தட்டிக் கொள்கின்றனர். தமது கட்சி நாட்டில் எந்தவொரு உள்ளூராட்சி மன்றத்திலும் அருதிப் பெரும்பான்மையைப் பெறவில்லை என்பதை அவர்கள் பேச விரும்பவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் பெற்றதைப் பாரக்கிலும், பத்து இலட்சம் வாக்குகளைக் குறைவாகவே தமது கட்சி பெற்றுள்ளது என்பதையும் அவர்கள் பொருட்படுத்தவில்லை.

கடந்த பொதுத் தேர்தலின் போது, சுமார் 350,000 வாக்குகளை, அதாவது 3 வீத வாக்குகளைப் பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி இம்முறை தமது வாக்குகளை 950,000 ஆகவும் விகிதாசாரத்தை மூன்றிலிருந்து ஒன்பது வரையிலும் அதிகரித்துக் கொண்டுள்ளது. அதை அக்கட்சியின் தலைவர்கள் பெரும் சாதனையாக எடுத்துரைக்கின்றனர். தமது கட்சி கடந்த கலத்தில் இரண்டு பொதுத் தேர்தல்களில் பாராளுமன்றத்தில் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்ற கட்சி என்பதை அவர்கள் நினைத்துப் பார்க்கவும் விரும்பவில்லை.

ஐக்கிய தேசிய கட்சி இச்சந்தர்ப்பத்தில் மௌனமாக இருக்கவே விரும்புகிறது போலும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 22 இலட்சம் வாக்குகளைப் பெற்ற அக்கட்சி அடுத்து வந்த பொதுத்தேர்தலில் எரிவாயு சிலிண்டர் சின்னத்திலும் யானை சின்னத்திலும் போட்டியிட்டு 566,000 வாக்குகளையே பெற்றது. இம்முறை அதுவும் குறைந்து 488,000 வாக்குகளையே அக்கட்சி பெற்றுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஆகியவற்றின் போது, வாக்காளர்களின் தேர்வுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள் வேறுபடுகின்றன. எனவே, ஒரு கட்சி இவற்றில் ஒரு தேர்தலில் அடைந்த வெற்றியையோ தோல்வியையோ மற்றொரு தேர்தலில் அக்கட்சி பெற்ற வெற்றி தோல்வியோடு ஒப்பிடுவது அவ்வளவு பொருத்தமாகாது. எவ்வாறாயினும், தேசிய மக்கள் சக்தி கடந்த சில மாதங்களில் இழந்த வாக்குகளின் பாரதூரத் தன்மையை எவ்வகையிலும் குறைத்து மதிப்பிட முடியாது.

தாம் 266 சபைகளில் முதலிடத்தை அடைந்தோம் என்றோ 133 சபைகளில் அருதிப் பெரும்பான்மையைப் பெற்றோம் என்றோ ஏனைய கட்சிகள் எங்கும் அருதிப் பெரும்பான்மையைப் பெறவில்லை என்றோ கூறி, அக்கட்சி தாம் அடைந்த பின்னடைவை மூடி மறைக்க முடியாது.

இந்த பின்னடைவுக்குத் தேசிய மக்கள் சக்தியின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களும் அக்கட்சியின் குறைபாடுகளும் இருப்பதைக் காணலாம். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது, ஆசன பகிர்வு கலப்பு தேர்தல் முறையின் கீழ் நடைபெற்றாலும், தொகுதி வாரியாகவே தேர்தல் நடைபெறுகிறது. எனவே, இத்தேர்தல்களின் போது, தொகுதி வாரியாக போட்டியிடும் தனித்தனி வேட்பாளர்களின் செல்வாக்கு மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

அனேகமாகத் தேசிய மக்கள் சக்தியின் தொகுதிவாரி வேட்பாளர்களைப் பார்க்கிலும், ஏனைய பிரதான கட்சிகளின் வேட்பாளர்களின் செல்வாக்கு அதிகமாகும், ஏனெனில் அவர்கள் பெரும்பாலும் பிரதேசத்தில் செல்வந்தர்களாக அல்லது உயர்குடிகளைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். இது தேசிய மக்கள் சக்திக்கு வாக்குகள் குறைய ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் வெற்றி பெறுவதற்குப் பிரதான காரணம் 2021இல் ஆரம்பித்த பொருளாதார நெருக்கடியினால் வாக்காளர்கள் மரபு ரீதியாக சிந்திப்பதைக் கைவிட்டு புதிதாகச் சிந்திக்க முற்பட்டமையேயாகும். பொருளாதார நெருக்கடியின் விளைவாக விரக்தியடைந்த மக்கள் அது வரை நாட்டை ஆட்சி புரிந்த கட்சிகளையும் அவற்றின் பிரதான ஆதரவு சக்திகளையும் நிராகரித்து மிகுதியாக இருந்த கட்சிகளில் முன்னணியில் இருந்த தேசிய மக்கள் சக்தியைத் தெரிவு செய்தனர்.

அவ்வாறு செய்த மக்கள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தமது பொருளாதார பிரச்சினைகளை உடனடியாக தீர்க்கும் என்று எதிர்பார்த்தனர். ஆனால், அது நடைபெறவில்லை. அதற்கு நியாயமான காரணங்களைப் போலவே அக்கட்சியின் குறைபாடுகளும் ஏதுவாயின.

அரசியல்வாதிகளிடம் எவ்வளவு நல்ல திட்டங்கள் இருந்த போதிலும், அதிகாரிகள் மூலமாகவே அவர்கள் அவற்றை நிறைவேற்ற வேண்டும். ஆயினும், அரச இயந்திரத்தை ஆட்கொண்டிருக்கும் அதிகாரிகள் அதற்குத் தயாராக இல்லை. பல பிரச்சினைகள் அரச துறையின் ஊழல், செயல்திறனின்மை மற்றும் வீண் விரயம் போன்ற காரணங்களாலேயே உருவாகியிருக்கின்றன, தீர்க்கப்படாமல் இருக்கின்றன.

உதாரணமாக, விலைவாசியோடு அரச அதிகாரிகளின் ஊழலும் சம்பந்தப்பட்டுள்ளது. அவர்கள் சந்தைக் காரணிகளை முறையாக தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதில்லை. அவர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் இடையே தொடர்புகள் இருக்கின்றன.

முன்னைய ஆட்சியாளர்களோடு கைகோர்த்து செயற்பட்ட அதிகாரிகள், அரசாங்கத்தின் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல தயாராக இல்லை என்று அமைச்சர்களான லால் காந்த மற்றும் சுனில் ஹந்துன்னெத்தி அகியோர் கடந்த டிசெம்பர் மாதம் கூறியிருந்தனர். இதுவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திடமிருந்து சிறிதளவாயினும் மக்களை அந்நியப்படுத்தக் காரணமாக அமைந்திருக்கலாம்.

அதேபோல, இலங்கையின் பொருளாதாரம் தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத் திட்டமொன்றின் கீழ், இயங்கி வருகிறது. உண்மையில் அந்நிதியமே நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது. கடந்த ஜனவரி மாதம் அரசாங்கம் மின் கட்டணத்தைக் குறைத்தது. அது பிழையென்றும் மின் கட்டணத்தை மின்சார சபையின் செலவுக்கேற்ப மீண்டும் அதிகரிக்க வேண்டும் என்றும் அந்நிதியம் இப்போது கூறுகிறது. சிலவேளை, நிதியத்தின் கடனில்; அடுத்த தவணைத் தொகை அதனடிப்படையில் வழங்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

இந்த நிலையில், நாணய நிதியத்தின் அனுமதியின்றி மக்களுக்கு சலுகை வழங்க அரசாங்கத்தால் முடியாத நிலைமையே நிலவுகிறது. நாட்டை பொறுத்தவரை அது சரியானதாக இருக்கலாம். ஆனால், மக்கள் அதனை பொருட்படுத்தவில்லை. எனவே, அந்தந்த துறையைச் சேர்ந்தவர்கள் பல்வேறு சலுகைகளைக் கேட்கிறார்கள். அரசாங்கத்தால் அக்கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாமல் இருக்கிறது. அதுவும் தேசிய மக்கள் சக்திக்கு வாக்குக் குறைய காரணமாக அமைந்திருக்கலாம்.

தேர்தல் காலத்தில் அரசியல் கட்சிகள் வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றன. சில கட்சிகள் நேர்மையாகவே வாக்குறுதிகளை வழங்கலாம். ஆனால், தாம் பதவிக்கு வந்து எவ்வளவு காலத்தில் அவற்றை நிறைவேற்றுவோம் என்று அக்கட்சிகள் கூறுவதில்லை. அதேவேளை, அக்கட்சிகள் எதிர்பாராத நிலைமைகளும் ஏற்பட்டு வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்ற முடியாமல் போகலாம். இது போன்ற நிலைமைகளை ஒரு கட்சி தேர்தலுக்கு முன்னர் அறிந்திருந்தாலும், அனுமானித்து இருந்தாலும் அதனைத் தேர்தல் பிரசார மேடையில் கூறி வாக்குகளைப் பெற முடியாது.

ஆனால், மக்கள் தாம் வாக்களித்து பதவியில் அமர்த்திய கட்சி பதவிக்கு வந்தவுடன் தமது பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அந்த வேகத்தில் காரியங்கள் இடம்பெறாவிட்டால், அவர்களது மனதில் சந்தேகம் எழுகிறது. இது வரை பதவியில் இருந்த அரசாங்கங்கள் தம்மை ஏமாற்றிய வரலாற்றை அவர்களால் மறக்கவும் முடியாது. எதிர்க்கட்சிகளும் மக்களை உசுப்பேற்றும். இதுவும் தேசிய மக்கள் சக்தி இம்முறை தேர்தலில் சந்தித்த பிரச்சினையாகும்.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடம் அக்கட்சி இம்முறை பொதுத் தேர்தலை போல் பெரிதாக ஆதரவு பெறவில்லை. தமிழர்கள் தமிழர்களுக்குத் தான் வாக்களிக்க வேண்டும் என்று வடக்கில் சில கட்சிகளால் மேற்கொள்ளப்பட்ட பிரசாரம் அதற்குக் காரணமாக அமைந்திருக்கலாம்.

இப்போது தேசிய மக்கள் சக்தியைப் பார்க்கிலும், ஏனைய கட்சிகளே, குறிப்பாக, தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் தாம் முதலிடத்துக்கு வந்த சபைகளில் அருதிப் பெரும்பான்மையில்லாமையால் அச்சபைகளின் நிர்வாகத்தை நடத்த முடியாத நிலையை எதிர்நோக்கியிருக்கின்றன. இதற்கு 2012ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான கலப்புத் தேர்தல் முறையே காரணமாகும்.

2018ஆம் ஆண்டே கலப்புத் தேர்தல் முறை முதன்முதலில் நடைமுறையில் பரீட்சித்து பார்க்கப்பட்டது. அத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி 340 உள்ளூராட்சி மன்றங்களில் 231 மன்றங்களில் முதலிடத்துக்கு வந்த போதிலும் அக்கட்சியும் பல சபைகளில் அருதிப் பெரும்பான்மையைப் பெறவில்லை. எனவே அக்கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ இத்தேர்தல் முறையில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என்றார்.

அத்துடன், இத்தேர்தல் முறையினால் சுமார் 4,000 ஆக இருந்த உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 8000க்கும் மேலாக அதிகரித்தது. இது அர்த்தமற்ற வீண் விரயமாகும். எனவே, மற்றொரு தேர்தல் வருமுன் இத்தேர்தல முறை திருத்தப்பட வேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

பகைவன் என நீங்கள் கருதுபவர்களிடம் இருக்கும் நல்ல குணங்களைத் தேடி அறிவீர்களாக! முழுமையாக நீங்கள் வாழுகின்றீர்களா என உங்களை நீங்களே கேட்பீர்களாக!

சில நிகழ்வுகள் எதிர்பாராத விதமாக சம்பவித்து விடுகின்றன. தப்பான அபிப்பிராயங்களால், நட்பு அடைபட்டுவிடுகின்றது. சிலசமயங்களில் உங்களால் ஒதுக்கப்பட்டவர்கள் உங்களை நினைத்து வருந்தலாம்.

சில கர்வ எண்ணங்களால் உறவுகள் பாதிக்கப்படுகின்றன. வாழும் காலத்தில் நெஞ்சத்தில் கலவரம், வெறுத்தலை விடுத்துச் சும்மா இருப்பது நல்லது. தொடரும் வெறுப்பை மறந்து விடுக. அதுவே உங்கள் இதயத்தில் புது ஒளியைப் பாய்ச்சும். தவறான எண்ணங்கள், கருத்துகள் உருவாதலாகாது.

வாழ்வின் அர்த்தம் யாவரையும் அரவணைத்துச் செல்வதிலேயே தங்கியுள்ளது. வெறுத்தலை விடுத்துச் சும்மா இருப்பது நல்லது. தொடரும் வெறுப்பை மறந்துவிடுக. அதுவே உங்கள் இதயத்தில் புதுஒளியைப் பாய்ச்சும்.

தகாத பொய்களைச் சொல்லி, எவரையும் பிரித்தலாகாது. சமூகம் இணைந்தால் பாரிய பலம் உண்டாகும். விலகி வாழ்ந்தால் எதையும் சாதிக்க முடியாது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### ஆழ்கடல் திருட்டை தடுக்கவும்



வாழைச்சேனை துறைமுகத்தில் இருந்து ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களின் பெறுமதி மிக்க வலைகள் மீன்களுடன் கடற்கொள்ளையர்களால் திருடப்பட்டு வருவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

தொடராக மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த திருட்டுச் சம்பவத்தால் மீனவர்களும், படகு உரிமையாளர்களும் பாரிய நஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இவ்வாறான நாசக்கார கும்பலிடமிருந்து மீனவர் சமூகம் பாதுகாக்கப்பட வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதுடன் அதற்கான தீர்வை பெற்றுத் தர வேண்டும் எனக் கோரி, வாழைச்சேனை துறைமுகத்தில் செவ்வாய்க்கிழமை(13) அன்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மீனவர் சமூகம் மகஜர்களை கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

– எச்.எம்.எம்.பர்ஸான்

# வெசாக் கொண்டாட்டம்...

ஹட்டன்



பௌத்த மக்களின் முக்கிய விழாக்களின் ஒன்றான வெசாக் கொண்டாட்டங்கள் நாடளாவிய ரீதியில் இன, மத, மொழி,பேதமின்றி கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த வருட அரச வெசாக் விழா நுவரெலியாவில் நடைபெறுகிறது. பல பிரதேசங்களில் வெசாக் தோரணங்கள், வெசாக் பக்தி பாடல் நிகழ்வுகள், தான சாலைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

– தமிழ்மிரர் நிருபர்கள்

நுவரெலியா



கல்முனை



வட்டுக்கோட்டை



மாலிகாவில



வட்டவளை



மன்னார்



மெதகம























## கொழும்பில் வெசாக் பந்தல்...

கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில், புத்தரின் வாழ்க்கை மற்றும் கடந்த கால அவதாரங்களின் முக்கிய தருணங்களை சித்திரிக்கும் வண்ணமயமான பந்தல்கள் மற்றும் விளக்குகளுடன் வெசாக் வாரம் நடைப்பெற்று வருகிறது.























## வெசாக் பந்தல்கள் பிரதமரால் திறந்து வைப்பு...

கொழும்பு, ஹுணுபிட்டியவில் உள்ள கங்காராமய விகாரையும், ஜனாதிபதி செயலகமும், பிரதமர் அலுவலகமும் இணைந்து ஏற்பாடு செய்த புத்த ரஷ்மி வெசாக் வலயத்தை, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய திங்கட்கிழமை (12) திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் புத்த சாசனம், சமய மற்றும் கலாசார விவகார அமைச்சர் ஹினிதும சுனில் செனவி, இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, வெளிநாட்டுத் தூதுவர்கள், பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதன்த்ரி மற்றும் பல விசேட விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.















சீனா

பாகிஸ்தானுக்கு ஆயுத உதவி விவகாரம்:

# சீனா மறுப்பு

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ள நிலையில், ஆயுதங்கள் மற்றும் இராணுவத்துக்கு தேவையான பொருட்களுடன் சரக்கு விமானம் ஒன்றை பாகிஸ்தானுக்கு சீனா அனுப்பியதாக இணைய தளங்களில், திங்கட்கிழமை (12) செய்திகள் வெளியாகியுள்ளன.



இது தற்போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், இந்த தகவலை சீனா மறுத்துள்ளது.

இது தொடர்பாக சீன மக்கள் விடுதலை இராணுவ விமானப்படை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

“பாகிஸ்தானுக்கு ஒய்-20 என்ற சரக்கு விமானம் மூலம் ஆயுதங்கள் அனுப்பப்பட்டதாக வெளிவந்துள்ள தகவல் முற்றிலும் தவறானது. அது வதந்தியாகும். அதை யாரும் நம்ப வேண்டாம்.

இராணுவம் தொடர்பான வதந்திகளை உருவாக்கிப் பரப்புபவர்கள் மீது சட்டப்பூர்வமாக நடவடிக்கை எடுக்கப்படும். ஆசியாவில் அமைதியைச் சீனா விரும்புகிறது. இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே சண்டை நிறுத்தத்தை ஏற்படுத்துவதில் சீனா ஆக்கப்பூர்வமாகப் பங்காற்றியுள்ளது. அதேநேரம், பெஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து இருநாடுகளுக்கு இடையே நடந்த சண்டையில், இந்திய விமானங்களைப் பாகிஸ்தான் சுட்டு வீழ்த்தியது என்ற பொய்யான தகவலை சீனாவின் அதிகாரப்பூர்வ ஊடகங்களில் பரப்பப்பட்டன.

இதை சீனாவில் உள்ள இந்திய தூதரகம் கடுமையாக கண்டித்ததுடன், இதுபோன்ற தகவல்களை வெளியிடுவதற்கு முன் அதனை சரிபார்க்க வேண்டும்” என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான்



பாகிஸ்தானுக்கு எதிராக

## இந்தியாவுடன் கைகோர்க்கும் பலுசிஸ்தான்

“இந்தியாவின் ஆதரவை நாங்கள் பெற்றால் இந்த தீவிரவாத அரசை (பாகிஸ்தானை) பலூச் தேசத்தால் ஒழிக்க முடியும்” என பலுசிஸ்தான் விடுதலைப் படை (பிஎல்ஏ) தெரிவித்துள்ளது.

மேலும், இது, அமைதியான, வளமான மற்றும் சுதந்திர பலுசிஸ்தான் உருவாக வழி வகுக்கும் என்றும், பிஎல்ஏ கூறியுள்ளது.

பாகிஸ்தானின் தென்மேற்கில் உள்ள பலுசிஸ்தான் மாகாணத்தைத் தனி நாடாக அறிவிக்கக் கோரி, ‘பலுசிஸ்தான் விடுதலைப் படை’ (பிஎல்ஏ) என்ற பெயரில் கிளர்ச்சியாளர்கள் பல ஆண்டுகளாக போராடி வருகின்றனர்.

இந்நிலையல், பிஎல்ஏ செய்தித் தொடர்பாளர் ஜீயந்த் பலூச், திங்கட்கிழமை (12) அன்று கூறுகையில்,

“இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் உச்சத்தில் இருந்தபோது ஆக்கிரமிப்பு பலுசிஸ்தானில் பாகிஸ்தான் இராணுவம் மற்றும் ஐஎஸ்ஐ உளவு அமைப்புக்கு எதிராக 71 ஒருங்கிணைந்த தாக்குதல்களை பிஎல்ஏ நடத்தியது.

சமீபத்திய இந்த தாக்குதல் 51க்கும் மேற்பட்ட இடங்களில் பல மணி நேரம் நீடித்தது. எதிரியை அழிப்பது மட்டுமே இந்த தாக்குதலின் நோக்கமல்ல. தற்காப்பு நிலைகள் மற்றும் தயார்நிலையை வலுப்படுத்துவதும் இதன் நோக்கமாகும்” என்றார்.

மியன்மார்

பாடசாலை மீது வெடி குண்டுத் தாக்குதல்:

## 20 மாணவர்கள் பலி

மத்திய மியன்மாரின் தபாயின் நகரத்தில் உள்ள கிராமத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் மீது மியன்மார் இராணுவம் மேற்கொண்ட வெடிகுண்டு தாக்குதலில், 20 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.

மத்திய மியன்மாரின் தபாயின் நகரத்தில் உள்ள கிராமத்தின் மீது, திங்கட்கிழமை (12) காலை 9 மணி அளவில் இராணுவத்தினர் விமானங்களில் இருந்து தாக்குதலில் இறங்கினர். அப்போது, அந்த பகுதியில் இருந்த பாடசாலை ஒன்றின் மீது ஒரு போர் விமானம் வீசிய வெடிகுண்டு விழுந்து வெடித்தது.

இந்த தாக்குதலில் 20 மாணவர்களும், 2 ஆசிரியர்களும் உயிரிழந்துள்ளனர். 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்த சம்பவத்தில் அருகிலுள்ள 3 வீடுகள் சேதமடைந்தன.

இதேபோன்று, கடந்த 2022ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம், பாடசாலை மற்றும் கிராமத்தின் மீது இராணுவ ஹெலிகொப்டர்கள் நடத்திய வான் வழித் தாக்குதல்களில் 7 சிறுவர்கள் உட்பட 13 பேர் கொல்லப்பட்டனர்.

2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடந்த தாக்குதலில் 160 பேர் வரை கொன்று குவித்துள்ளனர். இந்த வான்வழித் தாக்குதல் குறித்த தகவல்களை மியன்மார் இராணுவ அரசாங்கமோ, ஊடகங்களோ அதிகாரப்பூர்வமாக வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



ஜம்மு

## மீண்டும் பாடசாலைகள் திறப்பு

இந்தியா - பாகிஸ்தான் சண்டை முடிவுக்கு வந்த நிலையில், ஜம்முவில் செவ்வாய்க்கிழமை (13) அன்று பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ளன.

ஜம்முவின் எல்லை அல்லாத மாவட்டங்களில் கல்வி நிறுவனங்கள் மீண்டும் திறக்கப்படுவதாக, கல்வித்துறை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜம்மு பிரிவு ஆணையர் கூறுகையில்,

“ஜம்முவின் எல்லை அல்லாத மாவட்டங்களில் உள்ள கல்வி நிறுவனங்கள் செவ்வாய்க்கிழமை(13) மீண்டும் திறக்கப்பட்டன. அதே நேரத்தில் எல்லை மாவட்டங்களில் உள்ள பாடசாலைகள் மற்றும் கல்லூரிகள் தொடர்ச்சியான பாதுகாப்பு காரணமாக மூடப்பட்டுள்ளன.



எல்லை அல்லாத மாவட்டங்களான தோடா, கிஷ்த்வார், ரியாசி மற்றும் ராம்பன் ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. இருப்பினும், எல்லைக்கு அருகில் அமைந்துள்ள கதுவா, ஜம்மு, ரஜோரி, பூஞ்ச், சம்பா மற்றும் உதம்பூர் ஆகிய இடங்களில் உள்ள அனைத்து தனியார் மற்றும் அரசு கல்வி நிறுவனங்களும் மூடப்படும்.

நிலைமையை முழுமையாக மதிப்பாய்வு செய்த பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

எல்லை தாண்டிய பதற்றங்கள் அதிகமாக இருப்பதால் மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது” என்றார்.




# மீண்டும் ஆரம்பமாகும் ஐ.பி.எல்.

இந்தியன் பிறீமியர் லீக்கானது (ஐ.பி.எல்), எதிர்வரும் சனிக்கிழமை (17) அன்று மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதுடன், எதிர்வரும் ஜூன் மாதம் மூன்றாம் திகதி நிறைவடையவுள்ளதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் திங்கட்கிழமை (12) அன்று வெளியிடப்பட்ட அட்டவணை வெளிப்படுத்துகிறது.

எஞ்சிய போட்டிகளானவை பெங்களூரு, ஜெய்ப்பூர், டெல்லி, லக்னோ, மும்பை, அஹமதாபாத் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

பஞ்சாப் கிங்ஸ், டெல்லி கப்பிட்டல்ஸுக்கிடையேயான முதலாவது இனிங்ஸின் பாதியில் நிறுத்தப்பட்ட போட்டியும் மீண்டும் நடைபெறவுள்ளது.

பிரேஸிலின் பயிற்சியாளராக

## அன்சிலோட்டி



பிரேஸில் தேசிய அணியின் அடுத்த பயிற்சியாளர் கார்லோ அன்சிலோட்டி என அந்நாட்டு கால்பந்தாட்டச் சம்மேளனம் திங்கட்கிழமை(12) அன்று அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும், ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்றிட்டிலிருந்து அன்சிலோட்டி விலகுவதை அக்கழகம் உத்தியோகபூர்வமாக இன்னும் அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நடப்பு லா லிகா பருவகால இறுதிப் போட்டியைத் தொடர்ந்து மட்றிட்டை விலகும் அன்சிலோட்டி, பிரேஸிலை உத்தியோகபூர்வமாக இம்மாதம் 26ஆம் திகதி பொறுப்பேற்கவுள்ளாரென கால்பந்தாட்ட சம்மேளனம் தெரிவித்துள்ளது.

பிரேஸிலின் முதலாவது வெளிநாட்டுப் பயிற்றுவிப்பாளர் அன்சிலோட்டி ஆவார்.

முன்னைய பிரேஸில் பயிற்றுவிப்பாளர்களை விட இரு மடங்காக 197,000 ஐக்கிய அமெரிக்க டொலர்களை வாரமொன்றுக்கு ஊதியமாகப் பெறவுள்ள அன்சிலோட்டி, அடுத்தாண்டு உலகக் கிண்ணத்தை பிரேஸில் வென்றால் ஐந்து மில்லியன் யூரோக்களைப் பெறவுள்ளார்.





இத்தாலிய சீரி ஏ தொடர்:

## றோமாவை வென்றது அத்லாண்டா

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் செவ்வாய்க்கிழமை (12) நடைபெற்ற றோமாவுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் அத்லாண்டா வென்றது.

அத்லாண்டா சார்பாக அடெமோலா லுக்மன், இப்ராஹிம் சுலெமானா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். றோமா சார்பாகப் பெறப்பட்ட கோலை பிறையன் கிறிஸ்டன்டே பெற்றிருந்தார்.

சீரி ஏ புள்ளிகள் தரவரிசையில் 78 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நாப்போலி உள்ளது. 77 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான இன்டர் மிலனும், 71 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் அத்லாண்டாவும், 64 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் ஜுவென்டஸும் காணப்படுகின்றன.



பயிற்சியாளர்

## டைட்

பங்களாதேஷின் வேகப்பந்து வீச்சாளராக ஷோன் டைட்டை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை நியமித்துள்ளது.

டைட்டின் ஒப்பந்தமானது எதிர்வரும் 2027ஆம் ஆண்டு வரை காணப்படுகிறது.

அன்ட்ரே அடம்ஸையே டைட் பிரதியி டுகிறார்.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கான

## அவுஸ்திரேலியக் குழாமில் கிறீன்

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கான பாகிஸ்தான் குழாமில் காயத்திலிருந்து குணமடைந்த கமரன் கிறீன், ஜொஷ் ஹேசில்வூட், அணித்தலைவர் பற் கமின்ஸ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இதேவேளை, இலங்கைக்கு எதிரான தொடரில் இடைநடுவில் வெளியேறிய சாம் கொன்ஸ்டாஸும் குழாமில் இடம்பெற்றுள்ளதோடு, இரண்டாவது சுழற்பந்துவீச்சாளராக நேதன் லையனுக்கு அடுத்ததாக மற் கூனுமென் இடம்பெற்றுள்ளார்.

மேலதிக துடுப்பாட்டவீரர் மற்றும் விக்கெட் காப்பாளராக ஜொஷ் இங்லிஸ் இடம்பெற்றுள்ளதோடு, வேகப்பந்துவீச்சாளர் பிரெண்டன் டொக்கெட்



மேலதிக வீரராக குழாமுடன் பயணிக்கவுள்ளார்.

இக்குழாமே மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான தொடரிலும் விளையாடவுள்ளது.

குழாம்: பற் கமின்ஸ் (அணித்தலைவர்), ஸ்கொட் போலண்ட், அலெக்ஸ் காரி, கமரன் கிறீன், ஜொஷ் ஹேசில்வூட், ட்ரெவிஸ் ஹெட், ஜொஷ் இங்லிஸ், உஸ்மான் கவாஜா, சாம் கொன்ஸ்டாஸ், மற் கூனுமென், மர்னுஸ் லபுஷைன், நேதன் லையன், ஸ்டீவன் ஸ்மித், மிற்செல் ஸ்டார்க், பியூ வெப்ஸ்டர்

மேலதிக வீரர்: பிரெண்டன் டொக்கெட்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 14, மே 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.